1970 ஆகஸ்ட் 29]

இணைப்பு 1.

[3-ம் பக்கத்திலுள்ள 114 எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

The excavation of Korkai, the ancient port City of the pandyas, was taken up by the Tamil Nadu State Department of Archaeology to assess the Cultural sequence and the Chronological one in the midst of a tank. The excavations of Korkai revealed importance of the site to South Indian History. All together, five cuttings were laid, four in the present village of Korkai and a brick platform provided with a flight of steps at one end. The platform consisted of 9 courses of large bricks measuring 455 x 28 x 7½ cms. size. Immediately beneath the platform, three tabular rings, placed one over the other resembling the seakage Jars, were found. Besides, the excavation revealed a Megalithic urn containing a few pieces of post excarnated bones the remains of a foundation of a medical structure consisting of a course of dressed granite at one end and a masonry of irregular bricks at the other. A Chola coin of Rajaraja was recovered at the upper level. The earliest layer yielded megalithic assemblege dominated by black and red ware, black ware, red and red slipped wares. A pumber of conch pieces thrown after cutting bangles, cooper Objects, iron implements in some cases with wooden handles, perforated terracotta titles, heads made of crystal, Seapstone, terracotta, etc., and a torso of terracotta figurine and bone earlobes and arrowheads are other interesting findings.

தென்னிந்திய வரலாற்றில், பாண்டிய மன்னர்களின் பண்டையத் துறைமுக நகராக விளங்கிய "கொற்கை" நகரின் அகழ்பணி பண்பாட்டு நிரலொழுங்கையும், அதன் கால முறைச் சிறப்பையும் கணிப்பதற்காக தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டது. மொத்தத்தில் 5 இடங்களில் புதைபொருள் ஆராய்ச்சிக்காக நிலம் அகழ்ந்து எடுக்கப்பட்டது. இவற்றில் 4 அகழ்தல் பணிகள் தற்போதுள்ள கொற்கை கிராமத்திலும், மற்றொன்று ஏரியின் நடுவிலும் நடத்தப்பட்டன. இவ்வாறு அகழ்தெடுக்கப்பட்டதில் ஒரு கோடியில் வரிசையானபடிக் கட்டுடன் அமைந்து செங்கல் மேடை ஒன்று காணப்பட்டது. 45 × 25 × 7½ செ. மீட்டர் அளவுள்ள பெரிய செங்கற்கள் கொண்ட இந்த மேடை 9 அடுக்குகளைக் கொண்டிருந்தது. அந்த மேடையின் கீழே குப்பை கூளங்களைக் கொட்டி வைக்கப் பயன்படுத்தப்படும் பானையையொத்த வளையங்கள் மூன்று ஒன்றன் மேல் ஒன்று அடுக்கி வைக்கப்பட்டுக் காணப்பட்டன. இதைத் தவிர எலும்புத் துண்டுகளைக் கொண்ட பெரிய கற்காலத்தைச் சேர்ந்த முது மக்கள் தாழி ஒன்றும், இடைக்காலத்தைச் சேர்ந்த கட்டுமானம் ஒன்றின் அடித்தளத்தின் இடிபாடுகளும் இதன் ஒரு கோடியில் கருங்கல் கட்டிடமும் மற்றொரு கோடியில் தாறுமாறான செங்கற் கட்டிடப் பகுதியும் இருந்தன. மேல் மட்டத்தில் இராஜ ராஜ சோழர் காலத்திய காசு ஒன்றும் காணப்பட்டது. முதன் முதலில் தோண்டியெடுக்கப்பட்ட அடுக்கில் பெரிய கற்காலப் படி

வத்தில் அதோடு ஒட்டிக் காணப்பட்ட கறுப்பு, சிகப்பு ஓடுகளும், கறுப்பு ஓடுகளும், சிவப்பு ஓடுகளும், சிவப்பு வழவழப்பான ஓடுகளும் அடங்கிய கட்டுமானம் ஒன்று காணப்பட்டது. வளையல் செய்த பிறகு எறியப்பட்ட சங்குத் துண்டுகள் பலவும் செப்புப் பொருள்கள், இரும்புக் கருவிகள் இவற்றில் சிலமரப் பிடியை உடையயனவாக இருந்தன. துளையிடப்பட்ட சுடு மண் ஓடுகள், படிகம் சவர்க்காரச் சுடு மண் முதலியவற்றினுலான உருவங்கள், சுடுமண்ணில் செய்யப்பட்ட சிறு உருவச் சிலையின் முண்டம், செவி எலும்புகள், அம்புத் தலைகள் ஆகியவை கவனத்தை ஈர்க்கக் கூடிய பிற கண்டுபிடிப்புகளாகும்.

இணைப்பு 2.

[16-ம் பக்கத்திலுள்ள 118-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினுவின் விடையைக் காண்க.]

(அ) & (இ) பேரவையில் விடையளிக்கப்பட்டது.

(உ) கீழ்க்காணும் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது:—

(1) வேளாண்மை பட்டதாரிகள் மட்டுமே வேளாண்மைத் துறையைச் சேர்ந்த ஆசிரியர் பதவிகள் அனைத்திலும் நியமிக்கப் பட வேண்டும்.

(2) முற்றிலும் அறிவியல் பட்டதாரிகளையே வேளாண்மைத் துறையில் வேலைக்கு நியமிக்கும் நடைமுறையை முழுவதும் நிறுத்திவிட வேண்டும்.

(3) வேளாண்மைத் துறை இயக்குநர் பதவிக்கு வேளாண்மை பட்டதாரியையே நியமிக்கவேண்டும்.

(4) கோவையிலும், மதுரையிலும் உள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் தலைவர், முதல்வர் பதவிகளில் அறிவியல் பட்டதாரி களாக அல்லாமல் வேளாண்மை பட்டதாரிகளையே நியமிக்க வேண்டும்.

(5) தற்போது ஆசிரியர்களாகப் பணியாற்றும் அறிவியல் பட்டதாரிகள் வேறு பிரிவிற்கு மாற்றப்பட வேண்டும்.

(6) வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகள், மாவட்ட வேளாண்மை அதிகாரிகள், துணை இயக்குநர்கள், இணை இயக்கு நர்கள், பேராசிரியர்கள், முதல்வர், துணைத் தலைவர், தலைவர் ஆகியோரது சம்பள வீதங்கள் உயர்த்தப்பட வேண்டும்.

(7) வேளாண்மைத் துறையில் பணியாற்றிவரும் வேளாண்மைப் பட்டதாரிகள் அனைவருக்கும் அரசிதழ் பதிவுத் தகுதி கொடுக்கப்பட வேண்டும்.